# மங்கோலியாவிற்கு செயலாளர் (கிழக்கு) சௌரப் குமார் வருகை (செப்டம்பர் 12-14, 2023)

செப்டம்பர் 14, 2023

செயலாளர் (கிழக்கு) ஸ்ரீ சௌரப் குமார் 12-14 செப்டம்பர் 2023 வரை மங்கோலியாவிற்கு அதிகாரப்பூர்வ பயணம் செய்தார்.

பயணத்தின் போது, செயலாளர் (கிழக்கு) மங்கோலியாவின் வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளர் திரு என் அன்க்பயருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அவர் கல்வி மற்றும் அறிவியல் அமைச்சர் திரு எல் என்க்-அம்கலன் மற்றும் மங்கோலியாவின் அமைச்சரும் தலைமை அமைச்சரவை செயலாளருமான திரு டி அமர்பயஸ்கலனை சந்தித்தார். மங்கோலியாவின் டோர்னோகோபி மாகாணத்தில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் திட்டத்தின் கட்டுமானத் தளத்தை ஆய்வு செய்ததோடு, கந்தன் மற்றும் பெதுப் மடாலயங்களுக்கும் அவர் சென்றார்.

இந்த பயணத்தின் போது, இந்தியா-மங்கோலியா மூலோபாய கூட்டுறவை மேலும் வலுப்படுத்துவது மற்றும் உயர்மட்ட ஈடுபாடுகளை பேணுவது குறித்து இரு தரப்பும் விவாதித்தனர். வளர்ச்சி கூட்டாண்மை, கல்வி, தகவல் தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தொடர்பு, கலாச்சாரம், திறன் மேம்பாடு, ஹைட்ரோ கார்பன், சுரங்கம், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு குறித்து அவர்கள் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். மங்கோலியாவில் செயல்படும் 1.5 எம்எம்டிபிஏ எண்ணெய் சுத்திகரிப்பு திட்டம், ஏ.பி. வாஜ்பாய் கவல் தொழில்நுட்பம், தகவல் தொடர்பு மற்றும் அவுட்சோர்சிங்கிற்கான மையம் மற்றும் இந்தியா-மங்கோலியா நட்புப் பள்ளி உள்ளிட்ட இந்தியத் திட்டங்களில் கவனம் செலுத்தப்பட்டது.

பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் அவர்கள் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

**உளன்பாட்டர்**
**செப்டம்பர் 14, 2023**